| Published Date: | 30 Aug 2017 | Publication: | Maalai Malar |
|---|---|---|---|
| Edition: | Puducherry | Page No: | 2 |



# மாணவர்களுக்கு புதிர் போட்டி

இந்தியாவின் முன்னணி தகவல் தொழில் நுட்ப சேவைகள், ஆலோசனை மற்றும் வர்த்தகத் தீர்வுகள் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீஸ் நடத்தும் இந்தியாவின் மிகப்பெரிய பள்ளிகளுக்கு இடையிலான புதிர் போட்டியான டிசிஎஸ் ஐடி விஸ் சென்னை பதிப்பு 1250-க்கும் மேற்பட்ட மாணவர்களின் பங்கேற்புடன் மியூசிக் அகாடமியில் நடைபெற்றது. 620-க்கும் மேற்பட்ட அணிகளை வீழ்த்தி, கேந்திரய வித்யாலயா எண்.2, புதுச்சேரி பள்ளியைச் சேர்ந்த ஜெய கிருஷ்ணன் மற்றும் வேதபுரீஸ்வர் ஆகியோர் இதில் பிராந்திய வெற்றியாளர்களாக வெற்றி பெற்றனர். அவர்கள், இந்தியாவின் பிற 11 பிராந்திய அணிகளுடன், தேசிய அளவிலான இறுதிப் போட்டியில் போட்டியிடவுள்ளனர்.